Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, APRIL 29 2024

திங்கட்கிழமை ஏப்ரல் 29, 2024 | ஒளி: 09 கதிர் 240 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ | FREE

## “விழிப்பாக இருக்கவும்”



ஜனாதிபதி அலுவலகத்தில் பதவி வகிப்பதாக போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து, முதலீட்டாளர்கள், வேலை தேடும் இளைஞர்கள், பல்வேறு நாடுகளுக்கு விசா பெற முயற்சிப்பவர்கள் என பலரை ஏமாற்றி, பணம் பெறும் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

தொடர்ச்சி P2

## “மகன் வருவார் என்ற நம்பிக்கை இல்லை”

வ.சக்தி

காணாமலாக்கப்பட்ட தனது மகன் உயிரோடு திரும்பி வருவார் என்ற நம்பிக்கை தமக்கு கிடையாது எனவும் நோயுற்றுள்ள தனக்கு அரசாங்கத்தினால் நஷ்டஈடுகளைத் தந்து உதவுமாறு கவலையுடன் அரசாங்கத்திடம் அந்த தாய் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

“2003 ஆம் ஆண்டு கரடியனாறு பகுதியில் எனது மகன் காணாமல் போயுள்ளார் இதுவரை காலமும் நான் தேடித் திரிகின்றேன். இன்று வரை உரிய பதில் கிடைக்கவில்லை. இனி அவர் திரும்பி வருவார் என்ற நம்பிக்கை தமக்கு கிடையாது. நோயுற்றுள்ள எனக்கு அரசாங்கத்தால் நஷ்டஈடுகளைத் தந்து உதவுவதன் மூலம் வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்த முடியும் என தனது மகன் உயிரோடு இருந்ததால் தன்னை நன்றாகப் பார்த்திருப்பார் என்று காணாமலாக்கப்பட்ட மகன் ஒருவரின் தாய் கவலையுடன் தனது கருத்தைத் தெரிவித்துள்ளார். காணாமலாக்கப்பட்டோர் ஆட்கள் பற்றிய அலுவலகத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த மன்முனை வடக்கு மற்றும் வாழைச்சேனை ஆகிய பிரதேச

தொடர்ச்சி P2



சஜித்–முஸ்லிம் உறவை

# “சீர்குலைக்க திட்டம்”

### முஜிபுர் ரஹ்மான் குற்றச்சாட்டு; பணம் சேகரிப்பு ஹூதி குறித்து விளக்கம்



கொரோனா காலத்தில் ஜனாசா விடயத்தில் கோட்டாபய ராஜபக்ஷ எமது ஜனாஸாக்களை அடக்கக்கூடாது எரிக்க வேண்டும் என முடிவெடுத்த நேரத்தில், முஸ்லிம்கள் எல்லோரும் சேர்ந்து பொரளை கனத்த மயானத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினோம். அந்த ஆர்ப்பட்டத்தில் எமது உரிமைகள் பாதுகாக்க சஜித் பிரேமதாச எம்மோடு கலந்து கொண்டார் என தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், சஜித் பிரேமதாசவிற்கும் முஸ்லிம் சமூகத்திற்கும் இடையேயுள்ள உறவை சீர்குலைக்கவே திட்டம் போட்டுள்ளனர் என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை (28) நடந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். ஈரான் ஜனாதிபதியின் இலங்கை விஜயத்தினை தொடரந்து கடந்த வாரம் சமூக ஊடகங்களில் பல நாடுகளின் வேண்டுகோளின்

தொடர்ச்சி P2

## எல்லையில் மண்சரிவு அபாயம் அதிகரிப்பு



எல்ல - கரந்தகொல்ல, மலித்தகொல்ல பிரதேசத்தில் மண்சரிவு அபாயம் அதிகரித்துள்ளது என்றும் சேற்று நீரின் வேகம் அதிகரித்துள்ளது எனவும் பதுளை மாவட்ட செயலாளர் பிரபாத் அபேவர்தன, ஞாயிற்றுக்கிழமை (28) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## மறுத்தார் மைத்திரி



தான் தென்கொரியாவில் வாழப் போவதாக வெளியாகும் செய்திகள் முற்றிலும் பொய்யானவை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். அரசியல் எதிரிகளால் பொய் பிரசாரம் செய்யப்படுகிறது என்றும் அவர் கூறுகிறார்.

தொடர்ச்சி P2

## ஆளுநர் ஆகிறார் நசீர் அஹமட்



வடமேற்கு மாகாண ஆளுநராக முன்னாள் அமைச்சர் நசீர் அஹமட் நியமிக்கப்படவுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அந்த மாகாணத்தின் ஆளுநராக இருக்கும் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, மே மாதம் மூன்றாம் திகதி முதல் தென் மாகாண ஆளுநராகப் பதவியேற்க உள்ளார்.

தொடர்ச்சி P2

## இளம் விவாகரத்தும் மரணம் அதிகரிப்பும்

புதிதாக திருமணம் முடிக்கும் காதலர்கள், பல்வேறான காரணங்களால் இரண்டு, மூன்று வருடங்களுக்குள் விவாகரத்து (பிரிந்து செல்லுதல்) அதிகரித்துள்ளது என்று சிரேஷ்ட பிரதிப் பதிவாளர் நாயகம் (சிவில் பதிவுகள்) சட்டத்தரணி திருமதி லக்ஷிகா கணேபொல தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## சு.கவின் பிரிவுகளால் குழப்பமாகவே உள்ளது

### சித்தார்த்த சுமங்கல தேரர் தெரிவிப்பு

ஷேன் செனவிரத்ன

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் மூன்று பிரிவுகள் இருப்பதால், அதன் உண்மையான பிரதிநிதிகள் யார் என்பது மக்களுக்குப் பிரச்சினையாகியுள்ளதாக மல்வத்து மகாநாயக்கர் ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான யுவதி மரணம்



தமிழ்-சிங்கள புத்தாண்டு தினமாக 14 அன்று, மின்னேரிய கிரித்தலே பகுதியில், நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பலத்த காயமடைந்து அனுராதபுரம் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த 17 வயதுடைய பாடசாலை மாணவி சுமார் 14 நாட்கள் கழித்து உயிரிழந்துள்ளதாக மின்னேரிய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சி P2




## 35ஆவது ஆண்டு நிறைவு

மலையக மக்கள் முன்னணியின் 35ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பேராளர் மாநாடும் ஹட்டன் டி.கே.டபிள்யு மண்டபத்தில் அதன் தலைவரும் எம்.பியுமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (28) நடைபெற்றது. இதன்போது, கட்சியின் ஸ்தாபக தலைவர் அமரர் பெரியசாமி சந்திரசேகரன் நினைவாக நினைவு முத்திரை வெளியிடப்பட்டது.

டி.ஷங்கீதன்

## மே 13 முதல் கப்பல் சேவை

நாகை துறைமுகத்திலிருந்து இலங்கையின் காங்கேசன் துறைக்கு மீண்டும் கப்பல் போக்குவரத்து சேவை தொடங்கப்பட உள்ளது. ஏற்கெனவே சரியாவாணி என்ற கப்பல் இயக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது புதிய கப்பல் இயக்கப்பட உள்ளதென இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

## “தேர்தல் பேச்சால் ஒன்றும் நடக்காது”

வ.சக்தி

தேர்தல் காலத்தில் மாத்திரம் பேசிவிட்டுப் போவதினால் மாத்திரம் ஒன்றும் செய்துவிட முடியாது. பேச்சுக்கப்பால் செயற்பாட்டு ரீதியான விடையங்களையும் முன்னகர்த்திக் கொண்டு செல்ல வேண்டும்.

தொடர்ச்சி P2



ஜனாதிபதித் தேர்தலில்:

## ரணிலுக்கு ஆதரவு கரம் நீட்டினார் பிள்ளையான்

பேரின்பராஜா சபேஷ்



நாட்டை சிறப்பான முறையில் மீளக்கட்டியெழுப்பியவரும் தமிழருடைய பிரச்சினையை அடையாளப் படுத்தியுள்ளவருமான தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவையே தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிக்குமென அக்கட்சியின் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## வாகன இறக்குமதி தொடர்பான அறிவித்தல்



இந்த வருடத்தின் இறுதியில் அல்லது அடுத்த வருடத்தின் முற்பகுதியிலிருந்து மீண்டும் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு எதிர்பார்ப்பதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## “மகன் வருவார் என்ற நம்பிக்கை இல்லை”

செயலகத்திற்குட்பட்ட 34 காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களிடம் விசாரணைகள் சனிக்கிழமை(27) முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதன்போது கொழும்பிலிருந்து வருகைதந்த காணாமலாக்கப்பட்டோர் ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் அதிகாரிகள் மட்டக்களப்பு காணாமல் ஆகப்பட்டோர் ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் பிராந்திய கிளைக்கு நேரில் வருகை தந்து விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பிலும், அவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடுகள் வழங்குவது தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

## “சீர்குலைக்க திட்டம்”

பிரகாரம் சஜித் பிரேமதாச ஈரான் ஜனாதிபதியை சந்திக்கவில்லை என எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராக பல தகவல்கள் வந்து கொண்டிருந்ததை நாம் அறிவோம்.

ஈரான் ஜனாதிபதி இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக செய்திகள் வெளிவந்ததைத் தொடர்ந்து சஜித் பிரேமதாச, ஈரான் தூதுவருடன் பேசி சந்திப்பதற்கு நேரம் கேட்டார். ஈரான் ஜனாதிபதி நான்கரை மணித்தியாலம் இங்கு இருக்கப் போகிறார், இதனால் இக்குறிப்பிட்ட நேரத்திற்கு பல வேலைகள் இருப்பதால் நேரம் தருவதற்கு முயற்சி செய்வதாக ஈரான் தூதுவர் தெரிவித்திருந்தார். ஆனால், இறுதி வரை நேரம் தரவில்லை என்றார்.

எனினும், ஜனாதிபதி செயலகத்தில் ஏற்பாடு செய்திருந்த இராபோசனத்துக்கே சஜித் பிரேமதாசவுக்கு தொலைபேசி ஊடாக, அன்றையதினம் காலை அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்நாட்டுக்கு வெளிநாட்டில் இருந்து இவ்வாறு பிரமுகர்கள் வந்தால் அதன் ஏற்பாடுகளை வெளிவிவகார அமைச்சே மேற்கொள்ளும். எனினும். ஜனாதிபதி செயலகத்தாலேயே ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

அதனால் ஈரான் ஜனாதிபதியும் சஜித் பிரேமதாசவும் சந்திக்கக் கூடாது என ஜனாதிபதி செயலகத்திற்குத் தேவை இருந்தது. இதனால் தான் திட்டமிட்டுச் சந்திக்க விடாமல் வேலை பார்த்தனர் என்றார்.

அதுமட்டுமல்ல பலஸ்தீன் சம்பந்தமாக ஆரம்ப நாட்களில் இருந்து சஜித் பிரேமதாச, பாராளுமன்றத்தில், பலஸ்தீனத்தில் நடந்து வரும் கொடுமை, தாக்குதல்களுக்கு எதிராகத் தெளிவாக பலஸ்தீன மக்களின் உரிமைகளுக்காகப் போராடினார்.

ஆனால் இந்த அரசாங்கம் பலஸ்தீன் விடயத்தில் இரட்டை நிலைப்பாட்டில் செயற்பட்டு வருகிறது. ஒருபுறம் பலஸ்தீனத்துக்காக பணம் சேகரிக்கின்றனர், மறுபுறம் இஸ்ரேலில் தூதரகம் இருக்கத்தக்க ரணில் விக்ரமசிங்க விசா வசதிகளை துரிதமாக வழங்க புதிய காரியாலயம் ஒன்றையும் திறக்கிறார். தூதரகமும் இருக்கிறது. தூதரகத்திற்கு பதிலாக இஸ்ரேலில் இன்னுமொரு பிரதேசத்தில் புதிய காரியாலயம் ஒன்றை ஒரு மாத்ததிற்கு முன்னர் திருந்தார். இலங்கைக்கு துரிதமாக வருகை தரும் பொருட்டு, விசா வழங்கவே இது திறக்கப்பட்டது.

பலஸ்தீனத்திற்கு பணமும் சேர்கிறார் அதேபோல, இஸ்ரேலில் வேலை செய்ய தொழிலாளர்களை இங்கு இருந்து அனுப்புகின்றனர். இஸ்ரேலில் வேலை செய்ய இந்த ரணில், ராஜபக்ஷ அரசாங்கம் இடம்கொடுத்துள்ளது. அது குறித்து பேசிகிறார்கள் இல்லை. இது குறித்து மௌனமாக இருக்கிறார் என்றார்.

அதேபோல, தான் செங்கடலில் ஹூதி கிளர்ச்சியாளர்கள் பலஸ்தீனத்திற்கு ஆதரவாக தாக்குதல் நடத்துகிறார்கள். ஐரோப்பிய நாடுகள், அமெரிக்க போன்ற நாடுகள் ஹூதி கிளர்ச்சியாளர்களை தாக்க கப்பல் அனுப்பியிருக்கிறார்கள்.

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி என்ன செய்தார்? அவரும் அமெரிக்காவுடன் சேர்ந்து ஹூதி கிளர்ச்சியாளர்களை தாக்க கப்பல் அனுப்பினார்.

இந்த முஸ்லிம் மக்களை கவர இங்கு பணம் சேகரிக்கிறார். அமெரிக்கா உட்பட ஐரோப்பிய நாடுகளை சந்தோசப்படுத்த ஹூதி அங்கத்தவர்களை தாக்க கப்பல் அனுப்புகிறார். இது தான் இவர்களுடைய இரட்டை வேடம். எனவே இந்த ஜனாதிபதி செயலகத்தில் இருந்து சம்பளம் எடுக்கக் கூடிய சில சமூக ஊடகங்களை நடத்தும், சிலர் ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனைப் படி சஜித் பிரேமதாச மற்றும் முஸ்லிம் சமூகத்திற்கிடையே நிலவிவரும் சிறந்த உறவை பிரிப்பதற்கு திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றனர். இதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

## இளம் விவாகரத்தும் மரணம் அதிகரிப்பும்

பொருளாதாரக் காரணங்களும் பிற சமூகக் காரணங்களும் இதில் வேரூன்றியுள்ளன என்று அவர் குறிப்பிட்டார். இதேவேளை, நாட்டில் வருடாந்த உயிரிழப்புகள் கணிசமாக அதிகரித்துள்ளதாக கணேபொல குறிப்பிட்டுள்ளார்.

பொதுவாக, நாட்டில் ஆண்டு இறப்பு எண்ணிக்கை 2000 ஆம் ஆண்டில் 140,000 ஆக இருந்தது, ஆனால், அந்த எண்ணிக்கை இப்போது 180,000 ஆக உயர்ந்துள்ளது.

நாட்டில் பிறப்பு எண்ணிக்கையும் குறைந்துள்ளதாகப் பிரதிப் பதிவாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.

பொதுவாக, 2020 ஆம் ஆண்டளவில், நாட்டில் ஆண்டு பிறப்புகளின் எண்ணிக்கை சுமார் 325,000 ஆக இருந்தது. தற்போது அந்த எண்ணிக்கை 280,000 ஆக குறைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார பிரச்சினைகள், சரியான நேரத்தில் சிகிச்சை பெற முடியாமல் போவது, மன உளைச்சல் அதிகரிப்புடன் பல்வேறு நோய்களுக்குப் பலியாவது போன்றவையும் இறப்பு அதிகரிப்பை அதிகரிக்கலாம் என சுகாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

## ரணிலுக்கு ஆதரவு கரம்...

தற்போதைய ஜனாதிபதி ரணில் எங்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளார். ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறக்கூடிய வாய்ப்பும் அவருக்கே அதிகமாக உள்ளது. இந்நிலையில், எங்களுக்குப் பொருத்தம் இல்லாதவர்கள் அழைத்தால் நாங்கள் ஆதரவளிக்கப்போவதில்லை. எனினும், அரசியல் கட்சி என்ற ரீதியில் நாங்கள் அனைத்து வேட்பாளர்களுடனும் பேசுவோம் என்றும் அவர் கூறினார்.

மட்டக்களப்பில் ஊடகவியலாளர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை (28) கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்- தற்போதைய சூழ்நிலையினைப் பார்க்கின்ற போது நாட்டில் பொருளாதார ரீதியில் வளர்ச்சிப் போக்கு காணப்படுகிறது. மரக்கறி தானியங்களின் விலை குறைந்துகொண்டிருக்கிறது. இந்த வளர்ச்சிப் போக்கைத் தொடர்ச்சியாகக் கொண்டுசெல்லக்கூடிய ஒரு நிருவாகியைத் தெரிவுசெய்வதுதான் பொருத்தமாக இருக்கும் என்பதே எமது நிலைப்பாடு. நாங்கள் பிராந்திய அதிகாரத்தைப் பற்றிப் பேசுகின்ற அமைப்பு என்பதால் மிக நீண்டகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள எமது பிரதேசங்களைக் கட்டியெழுப்பக்கூடிய எங்களுக்குக் கௌரவம் தரக்கூடிய எங்களது கட்சியைத் தொடர்ந்தும் நிருவாகத்தோடு இணைத்து எங்களுடைய வேண்டுகோள்களை நிறைவேற்றக் கூடிய மற்றும் நாங்கள் முன்வைத்துள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தை அமுலாக்கக்கூடியவராக ஜனாதிபதி ரணிலை காண்கின்றோம். எனவே, நாங்கள் அவருக்கே ஒத்துழைப்பு வழங்குவோம். பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன தற்போதைய ஜனாதிபதிக்குச் சாதகமான சூழல் உள்ளதை அறிகிறோம். தேசிய மக்கள் சக்தி தொடர்பாக தங்களது கருத்து என்னவென்று ஊடகவியலாளர் கேட்டபோது, கடந்த காலங்களில் தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு இருந்தது. அவர்களுடைய கருத்துக்கள் மக்கள் மத்தியில் போய்ச் சேரும் என்ற எண்ணம் இருந்தது. கூட்டங்களில் சனம் அதிகம் இருப்பதாகவும் கூறப்படுகிறது. ஆனால் இது ஒரு ஜனாதிபதியைத் தீர்மானிப்பதற்கான ஒரு மாற்றமாக இருக்குமா? என்பது என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என்றார். தேசிய மக்கள் சக்தியின் கூட்டங்களைப் பார்க்க வருகின்ற மக்களை வைத்து வாக்குகளைத்தீர்மானிக்க முடியாது. தேசிய மக்கள் சக்தியினர் சிறந்த பேச்சாளர்கள், ஒரு கட்டமைக்கப்பட்ட அமைப்பாக இருக்கிறார்கள் அவர்கள் இந்த நாட்டை எவ்வாறு கொண்டு செல்வார்கள் என்பதற்கான உத்தரவாதம் எங்களால் கூறமுடியாது என்றார்.

மேலும், தேசிய மக்கள் சக்தியின் அண்மைக்கால யாழ்ப்பாண விஜயம் மற்றும் வெளிநாடுகளுக்கான விஜயத்தின் போது வெளியிட்ட கருத்துக்களை உற்றுநோக்கினோம். இந்த நாட்டில் இனப்பிரச்சினை இருப்பது போல உணர்வில்லாதவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் அதிகாரப் பகிர்வு தொடர்பாக நேரடியான பதிலைக் கூறுவதாகவும் இல்லை. அவர்கள் இந்த நாட்டில் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்மானங்களை எடுப்பார்கள் என்பதை என்னால் நம்ப முடியாது என்றும் தெரிவித்தார்.

## சு.கவின் பிரிவுகளால் குழப்பமாகவே உள்ளது

அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினர் மல்வத்து மகாநாயக்க தேரரை வெள்ளிக்கிழமை (26) சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டனர். இதன்போதே, கட்சியின் உண்மையான உரிமையாளர்கள் யார் என்ற பிரச்சினைக்கு நீதிமன்றங்களால் மட்டுமே தீர்வு காணப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்

தனியான அரசியல் கட்சியுடன் இணைந்து பயணிக்க நினைக்கும் சிலர் நீதிமன்றம் சென்று தடை உத்தரவு பெற்றுள்ளதாகவும் அங்கு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ இதன்போது வலியுறுத்தினார். ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 116 செயற்குழு உறுப்பினர்கள் ஏகமானதாக தம்மைச் செயற்பாட்டுத் தலைவராகத் தெரிவு செய்துள்ளதாக வலியுறுத்திய அமைச்சர், நீதிமன்றத்தின் கோரிக்கைக்கு இணங்க ஒருதலைபட்சமாக தடையுத்தரவு பிறப்பித்துள்ளதாகவும், இது தொடர்பில் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்தார்.

மறைமுக நிகழ்ச்சி நிரல்களையும், உள்நோக்கங்களையும் கொண்ட குழுவினால் பல்வேறு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்த அவர், ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசியல் கட்சி என்ற ரீதியில் பெரும்பான்மை உறுப்பினர்களின் சம்மதத்தின் அடிப்படையிலேயே தீர்மானங்களை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

## “தேர்தல் பேச்சால் ஒன்றும் நடக்காது”

எனவே அபிவிருத்தித் திட்டங்கள் மக்களைச் சென்றடைய வேண்டும். இல்லையேல் மக்களை வைத்து ஏமாற்றிப் பிழைப்பவர்கள் உள்ளார்கள் என்று இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்தரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் துறைநீலாவணைக் கிராமத்தில் 350 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் 6 கிலோமீற்றர் வீதிகள் கார்பெட் வீதிகளாகப் புனரமைக்கப்பட்டு அதனை மக்கள் பாவனைக்குத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் குறிப்பிடுகையில்..

தேர்தல் காலத்தில் மாத்திரம் பேசிவிட்டுப் போவதினால் மாத்திரம் ஒன்றும் செய்துவிட முடியாது. பேச்சுக்கப்பால் செயற்பாட்டு ரீதியான விடையங்களையும் முன்னகர்த்திக் கொண்டுசெல்ல வேண்டும். எனவே, அபிவிருத்தித் திட்டங்கள் மக்களைச் சென்றடைய வேண்டும் இல்லையேல் மக்களை வைத்து ஏமாற்றிப் பிழைப்பவர்கள் உள்ளார்கள் என்றார்.

மக்களுக்கான தேவைகளைக் கண்டறிந்து சேவைகளை மேற்கொள்பவர்கள்தான் மக்கள் தலைவர்களாகும். எனவே, வாக்குக்காக வேலைகளைச் செய்ய வேண்டும் என்றார்.

## மே 13 முதல் கப்பல் சேவை

நாகையிலிருந்து இலங்கைக்கு 40 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் கப்பல் போக்குவரத்து சேவை தொடங்கப்பட்டது. இதனை பிரதமர் மோடி காணொளி காட்சி மூலம் கொடியை அசைத்துத் தொடங்கி வைத்தார். நாகை துறைமுகத்திலிருந்து செரியாபானி என்ற கப்பல் இலங்கையின் காங்கேசன் துறை வரை இயக்கப்பட்டது.

ஆனால், இந்த கப்பல் சேவையைப் பயன்படுத்த அதிக கட்டணம் வசூலிக்கப்படுவதாகப் புகார் எழுந்தது. அதோடு இலங்கை - இந்தியா இடையே பயணிக்க விமானச் சேவைகளுக்கான அனைத்து நெறிமுறைகளும் பின்பற்றப்படும் என தெரிவிக்கப்பட்டதால் கப்பல் போக்குவரத்து சேவையைப் பயன்படுத்தும் பயணிகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தது.

இதனைத் தொடர்ந்து பயணிகள் தங்களின் பயணத்திற்குத் தேவையான ஆவணங்களை ஏற்பாடு செய்ய அவகாசம் அளிக்கும் வகையில் இந்த கப்பல் போக்குவரத்து சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

பின்னர் மழை புயல் என தொடர்ந்ததால் சுமார் ஆறு மாதத்திற்கு மேலாக இந்த கப்பல் சேவை நிறுத்தப்பட்டது. அத்துடன், கடந்த பெப்ரவரி மாதம் நாகை இலங்கை இடையே மீண்டும் கப்பல் போக்குவரத்து சேவை தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதனால் மக்கள் பெரிதும் எதிர்பார்த்து இருந்தனர். ஆனால், கப்பல் சேவை தொடங்கப்படவில்லை.

**“ கடந்த பெப்ரவரி மாதம் நாகை இலங்கை இடையே மீண்டும் கப்பல் போக்குவரத்து சேவை தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதனால் மக்கள் பெரிதும் எதிர்பார்த்து இருந்தனர். ஆனால், கப்பல் சேவை தொடங்கப்படவில்லை**

இந்நிலையில், தற்போது மீண்டும் நாகை இலங்கை இடையே கப்பல் போக்குவரத்து சேவை தொடங்கப்பட உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. எதிர்வரும் மே 13ஆம் திகதி முதல் நாகை - இலங்கை இடையே கப்பல் போக்குவரத்து சேவை மீண்டும் தொடங்கப்பட உள்ளது. ஏற்கெனவே செரியாபானி என்ற கப்பல் நாகை இலங்கை இடையே இயக்கப்பட்ட நிலையில் தற்போது சிவகங்கை என்ற பெயரில் புதிய கப்பல் இயக்கப்பட உள்ளது.

## “விழிப்பாக இருக்கவும்”

இவ்வாறான மோசடியாளர்கள் குறித்து பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறும், இவ்வாறான நபர்கள் குறித்து சந்தேகம் ஏற்பட்டால் ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் பிரசாத் செனரத் என்ற அதிகாரியை +94 71 530 8032 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்புகொண்டு, தகவல் பெற்றுக்கொள்ளுமாறும் ஜனாதிபதி அலுவலகம் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

## ஆளுநர் ஆகிறார் நசீர் அஹமட்

தென் மாகாண ஆளுநராக கடமையாற்றிய வில்லி கமகே இராஜினாமா செய்ததை அடுத்து இந்த ஆளுனர் பதவி மாற்றம் இடம்பெற்ற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மறுத்தார் மைத்திரி

இந்த நாட்களில் நான் தென் கொரியாவுக்குச் செல்வதாகப் பல்வேறு ஊடகங்கள் மூலம் பொய்யான செய்திகள் அதிகம் பரப்பப்படுகின்றன. தென் கொரியாவுக்கோ அல்லது உலகின் வேறு எந்த நாட்டிற்கோ செல்ல எனக்கு விருப்பமில்லை.

அரசியல் எதிரிகளின் இத்தகைய பொய்ப் பிரசாரத்தை நான் வன்மையாக நிராகரிக்கிறேன் என குறிப்பிட்டுள்ளார்.

நீதிமன்றத்திடமிருந்து எனக்கு தடையுத்தரவு உள்ளதால், கம்பஹா மாநகர சபை மைதானத்தில் உலக தொழிலாளர் தினத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் கட்சியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகள் ஏற்கெனவே ஏற்பாடு செய்துள்ளனர் என்றும் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாகன இறக்குமதி தொடர்பான அறிவித்தல்

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட குழுக்களின் பரிந்துரைகளும் கவனத்தில் கொள்ளப்படும் என அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பான கலந்துரையாடல்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

## எல்லையில் மண்சரிவு அபாயம் அதிகரிப்பு

இதன்காரணமாக எல்ல- வெல்லவாய பிரதான வீதி நாளுக்கு நாள் பாரிய அச்சுறுத்தலாக மாறி வருகின்றது என்றார்.

மலித்தகொல்ல பிரதேசத்தில் 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற மண்சரிவால், அங்கு வசித்து வந்த 13 குடும்பங்கள் ஏற்கெனவே, வெளியேற்றப்பட்டு, 5 குடும்பங்கள் வேறு இடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளன.

எஞ்சிய 8 குடும்பங்கள் மீள்குடியேறுவதற்கு பொருத்தமான நிலம் மற்றும் அடிப்படை வசதிகள் கிடைத்துள்ளன. அடுத்த சில மாதங்களில் வீடுகளை நிர்மாணிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றார்.

உமாஓயா சுரங்கப்பாதையில் நீர் நிரப்பப்படுவதால் கரடகொல்ல மலித்தகொல்ல பிரதேசத்தில் மண்சரிவு ஏற்படுவதாக மக்களின் தெரிவிக்கின்றனர்.

ஆகையால், இது தொடர்பில் நீரியல் மற்றும் புவியியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்படாததால் அது சாத்தியமில்லை எனவும் மாவட்ட செயலாளர் தெரிவித்தார்.

## துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான யுவதி மரணம்

கிரித்தலை பகுதியைச் சேர்ந்த ஜே.ஐ.கோசலா சாமோத்ய பண்டார என்ற யுவதியே உயிரிழந்துள்ளார்.

இந்த யுவதி தனது வீட்டுக்குப் பக்கத்து வீடொன்றில் கடந்த 14ஆம் திகதி நடைபெற்ற புத்தாண்டு கொண்டாட்டத்தில் பங்கேற்றபோது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார்.

அதேநேரம், பிரதேசவாசிகள் அவரை ஹிகுராக்கொட வைத்தியசாலையில் அனுமதித்து பின்னர் பொலன்னறுவை பொது வைத்தியசாலைக்கு மாற்றியுள்ளனர்.

பொலன்னறுவை பொது வைத்தியசாலைக்கு பின்னர் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட அவர், அங்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டு மீண்டும் பொலன்னறுவை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். அங்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.



**“ இந்த மாணவிக்கும் 40 வயதான நபருக்கும் இடையில் காதல் தொடர்பு இருந்ததாகும். அவ்விருவரும் சிறிதுகாலம் தனியாக வாழ்ந்துவந்துள்ளனர்**

இந்த மாணவிக்கும் 40 வயதான நபருக்கும் இடையில் காதல் தொடர்பு இருந்ததாகும். அவ்விருவரும் சிறிதுகாலம் தனியாக வாழ்ந்துவந்துள்ளனர். இந்நிலையில், அந்த மாணவி தன்னுடைய பெற்றோரின் வீட்டுக்கு வந்து, அந்த நபருடன் செல்வதற்கு மறுத்துள்ளார்.

புத்தாண்டு தினத்தன்று மாணவியின் வீட்டுக்கு வந்த அந்த நபர், தன்னுடன் வருமாறு அழைத்துள்ளார். அதற்கு அந்த மாணவி மறுப்புத் தெரிவிக்கவே, துப்பாக்கியால் சுட்டுவிட்டு தலைமறைவாகிவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# “அனுபவமும் ஆற்றலும் மிக்கவரே ஆளுநர் செந்தில்”

கிழக்கு மாகாண ஆளுநரின் அர்ப்பணிப்புக்களை பாராட்டுவதாகவும் சேவைகளை வாழ்த்துவதாகவும், அனுபவமும் ஆற்றலும் மிக்க ஒருவரே கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்மான் எனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் திருகோணமலை மாவட்ட பாரளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ்.தௌபீக் தெரிவித்துள்ளார்.

ஆளுநர் தொடர்பில் ஞாயிற்றுக்கிழமை (28) ஊடகங்களுக்கு கருத்துத்தெரிவிக்கையிலே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாண அரசியல் வரலாற்றில் பல்வேறு ஆளுநர்களுடன் இனைந்து பணியாற்ற எனக்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

இருந்தபோதிலும் ஆளுநர் செந்தில் தொண்டமானுடன் இணைந்து மக்கள் பணியாற்ற கிடைத்ததில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

செந்தில் தொண்டமான் சகோதர இனத்தவராக, வெளி மாகாணத்தைச் சேர்ந்தவராக இருந்த போதிலும், மூவின மக்களுக்கும் சிறப்பாக சேவையாற்றும் சிறந்த ஆளுநராகத் திகழ்கிறார். அரசியல்வாதிகளுடனும் பொதுமக்களுடனும் அரசு அதிகாரிகளுடனும் சிறந்த தொடர்பை ஏற்படுத்திச் சிறந்த முறையில் பணியாற்றுகின்றார்.

மக்கள் பிரச்சினைகளை அவரது கவனத்திற்குக் கொண்டு செல்கையில் உரிய அதிகாரிகளுடன் பேசி மிக விரைவில் அதற்கான தீர்வை பெற்றுத்தருவது அவரது ஆளுமையை வெளிப்படுத்துகிறது.

திருகோணமலை மாவட்டத்தில் காணப்படும் பல்வேறு சமூக, பொருளாதார பிரச்சினைகள் தீர்ப்பதற்கு ஆளுநர் தனக்கு உதவுவதாகவும், ஆளுநருடன் இணைந்து மேலும் பல அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ளவிருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

இன, மத, பிரதேச வேறுபாடுகளின்றி மக்கள் பணியாற்றும் ஆளுநருக்குத் தனது வாழ்த்துக்களையும் பிரார்த்தனையையும் தெரிவிப்பதாக அவரது உரையில் குறிப்பிட்டுள்ளனர்.



## தாக்குதலால் ஒருவர் படுகாயம்

எச்.எம்.எம்.பர்ஸான்

மனநலம் பாதிக்கப்பட்ட நபரொருவர் கத்தரிக்கோலால் குத்தியதில் ஒருவர் படுகாயமடைந்துள்ள சம்பவம் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீராவோடை பகுதியில் சனிக்கிழமை (27) இடம்பெற்றுள்ளது.

எதிர்பாராத நிலையில், நின்றுக்கொண்டிருந்த நபர் ஒருவர் மீது மனநலம் பாதிக்கப்பட்டவர் திடீரெனெப் பாய்ந்து தன்வசம் வைத்திருந்த கத்தரிக்கோலால் முதுகுப் பகுதியில் குத்தியுள்ளார்.

இச் சம்பவத்தில் காயமடைந்த நபர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதுடன், மனநலம் பாதிக்கப்பட்ட நபரை கைது செய்ய வாழைச்சேனை பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### தங்கம் கடத்தல்;
## இரு பெண்கள் உட்பட மூவர் கைது

யது பாஸ்கரன்

கிளிநொச்சி பகுதியில் கார் ஒன்றில் கடத்திச் செல்லப்பட்ட 4 கிலோ 170 கிராம் தங்க கட்டி மீட்கப்பட்டு, இரு பெண்கள் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம் சனிக்கிழமை (27) பதிவாகியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து ஏ-09 வீதியூடாக வவுனியாவுக்கு காரொன்றில் மேற்படி எடையுடைய தங்கம் கடத்தப்படுவதாக




இராணுவ புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த விசேட தகவல்களின் அடிப்படையிலேயே, கிளிநொச்சி கந்தசாமி ஆலயத்திற்கு அண்மித்த பகுதியில் வைத்து விசேட அதிரடிப்படையினரால் குறித்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## மல் கமலா கைது

ஷேன் செனவிரத்ன

ஹெரோயின் போதைப்பொருள் விற்பனை செய்ததாகக் கூறப்படும் பெண்ணொருவர், கெட்டம்பே, ராஜோபா வானராம விகாரைக்கு முன்பாக பூக்கடை ஒன்றை நடத்திக் கொண்டிருந்த போது இரண்டு கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் சனிக்கிழமை (27) கைது செய்யப்பட்டதாகக் கண்டி ஊழல் ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

மல் கமலா என்ற பெண், பூக்களுக்கு அடியில் வைத்து தனக்குத் தெரிந்த வாடிக்கையாளர்களுக்கு ஹெரோயின் போதைப்பொருள் விற்பனை செய்தது பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட பெண்ணின் இரண்டு மகன்களும் ஹெரோய்ன் போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கண்டி பிரதேசத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அனுருத்த பண்டாரநாயக்கவின் பணிப்புரைக்கு அமைய விசேட பொலிஸ் குழுவொன்று மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.



## ஐவருக்கு வலை

எம்.யூ.எம்.சனூன்

கற்பிட்டியில் 37 கிலோ கிராம் தங்கம் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வரும் சந்தேகநபர்கள் ஐவரைக் கைது செய்ய இலங்கை பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

கடந்த 2023 நவம்பர் மாதம் கற்பிட்டி பிரதேசத்தில் நபர் ஒருவரைக் கடத்தி 37 கிலோ கிராம் தங்கத்தைத் திருடிய சந்தேகநபர்கள் தேடப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


கற்பிட்டி சுற்று வட்ட நீதவான் நீதிமன்றத்தினால் பெயரிடப்பட்டுள்ள சந்தேகநபர்கள் 5 பேரும் தமது வீடுகளை விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர்கள் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் 071- 8591763 அல்லது 071-8594916 என்ற தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.









### வீட்டில் விபசார விடுதி
## தாய், மகளின் சிக்கினர்

பெரிய வீடொன்றில் தாயும் மகளும் நடத்தி வந்த விபசார விடுதியைச் சுற்றிவளைத்த பொலிஸார், அங்கிருந்த மூன்று பெண்களையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாகக் கண்டி குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஹந்தானை பிரதேசத்தில் பெரிய வீடொன்றிலேயே இவ்வாறு விபசாரம் செய்து வந்துள்ளனர்.

விபசார மையத்தின் மேலாளராக மகளும், தாய் காசாளராகவும் பணிபுரிந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபசார விடுதி தொடர்பில் இரண்டு வாரங்களாக விசாரணைக் கடமைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் 5,000 ரூபாவிற்கு பெண்ணொருவரை கொள்வனவு செய்தபோதே சந்தேகநபர்களை கைது செய்ததாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

## ஓய்வு பெற்றனர்





காரைதீவைச் சேர்ந்த ஆசிரியை திருமதி ஜெயகோபன் நந்தினி தனது 60ஆவது வயதில் ஓய்வு பெற்றார்.

அவர் இறுதியாக கற்பித்த நிந்தவூர் இமாம் கஸ்ஸாலி மஹா வித்தியாலயத்தில் பிரியாவிடை நிகழ்வு வெள்ளிக்கிழமை (26) நடத்தப்பட்டது.

2000ஆம் ஆண்டு தொடங்கிய அவரது ஆசிரியர் சேவை 2024 உடன் நிறைவு பெற்றது.

2000-2008 வரை விபுலானந்த மத்திய கல்லூரி காரைதீவு

2009-2019 வரை அட்டப்பள்ளம் விநாயகர் வித்தியாலயம். இறுதியாக

2020-2024 வரை இமாம் கஸ்ஸாலி மஹா வித்தியாலயத்தில் சேவையாற்றினார்.

– வி.ரி.சகாதேவராஜா





40 ஆண்டு கால கல்விச் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச்செல்லும் எ.ஆர்.சத்தியோந்திராவுக்கான சேவை கால பிரியாவிடை, கௌரவிப்பு நிகழ்வு ஹட்டன் கிருஸ்ணபவன் மண்டபத்தில், சனிக்கிழமை (27) இடம்பெற்றது.

ஹட்டன் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆர்.விஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், ஹட்டன் கல்வி வலயத்திற்கு உட்பட்ட பிரதி கல்விப்பணிப்பாளர், உதவிக்கல்விப் பணிப்பாளர், அதிபர்கள், பிரதி அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், வளவாளர்கள், ஆசிரியர்கள் காரியாலய உத்தியோகஸ்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நாட்பது ஆண்டுகாலம் கல்வித்துறையில் சேவையாற்றிய சத்தியோந்திரா அம்மையார் கல்வி அமைச்சின் உதவி செயலாளர், மாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர், வலயக்கல்வி பணிப்பாளர், சீடா வள நிலைய இணைப்பாளர், என பல்வேறு துறைகளில் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

– எம்.கிருஸ்ணா

## விடுதியில் மாணவி; ஆசிரியர் கைது

ஹட்டன் பிராந்திய கல்வி அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் தான் தங்கியிருக்கும் விடுதில், மாணவி ஒருவர் இருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில், அந்த விடுதியில் தங்கியிருக்கும் ஆசிரியர் ஒருவரை கினிகத்தேனை பொலிஸார் சனிக்கிழமை (27) கைது செய்யப்பட்டுள்ளார்.

கினிகத்தேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதான பாடசாலை ஒன்றின் ஆசிரியரே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதே பொலிஸ் எல்லைக்கு உட்பட்ட மற்றுமொரு பாடசாலையிலிருந்து 11ஆம் தரத்தில் கல்வி கற்கும் பாடசாலை மாணவியை ஆசிரியர் தங்கியிருக்கும் பாடசாலையின் ஆசிரியர் விடுதிக்கு அழைத்து வந்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஆசிரியர்



கினிகத்தேனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஆசிரியர் தற்போது பணிபுரியும் பாடசாலைக்கு முன்னதாக அந்த மாணவி கல்வி பயிலும் பாடசாலையில் பல வருடங்களாகச் சேவையாற்றி வந்துள்ளார் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

மேலதிக வகுப்பு ஆரம்பிப்பதற்கு தாமதமானதால், ஆசிரியரின் விடுதிக்குத் தான் சென்றதாக பொலிஸாரிடம் மாணவி தெரிவித்துள்ளார். ஆசிரியையின் இல்லத்திற்குத் தான் சென்றபோதும், ஆசிரியர் தன்னை துன்புறுத்தவில்லை என பாடசாலை மாணவி, பொலிஸாரிடம் மேலும் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவி மருத்துவ பரிசோதனைக்காக நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலை சட்ட வைத்தியரிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், கைது செய்யப்பட்ட சந்தேகநபரான ஆசிரியரை ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக கினிகத்தேனை பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கமான 119க்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்தே, ஆசிரியர் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## டிப்பர் புரண்டதில் ஒருவர் காயம்

யது பாஸ்கரன்

கிளிநொச்சி ஏ09 வீதியின் பரந்தன் சந்திக்கு அண்மித்த பகுதியில் டிப்பர் வாகனமொன்று புரண்டதில் ஒருவர் காயமடைந்துள்ள சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (28) இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் நோக்கி சீமெந்து கல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனத்தின் பின் சில்லு திடீரென காற்று போனதால் குறித்த டிப்பர் வாகனம் ஏ09-வீதியின் நடுவே புரண்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

விபத்தில் டிப்பர் வாகனத்தில் பயணித்த ஒருவர் காயமடைந்து தெய்வாதினமாக உயிர் தப்பியுள்ளதாக தெரியவந்துள்ளது.

இவ் விபத்து தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகவும் ஏ09 வீதியுடான போக்குவரத்து வழமைக்கு திரும்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஓர் அரசியல் கால்பந்தாக 4/21ஐ மாற்றுவதை தவிர்ப்பது நல்லது

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான மற்றுமொரு பாராளுமன்ற விவாதம் 2024 ஏப்ரல் 24,25 மற்றும் 26 ஆகிய மூன்று நாட்களாக இடம்பெற்றது. ஐக்கிய மக்கள் சக்தி முன்வைத்த சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையின் பிரகாரம் இடம்பெற்ற இந்த விவாதத்தில் பழைய பல்லவிகளே மீண்டும், மீண்டும் பாடப்பட்டன. ஒருவருக்கு ஒருவர் அல்லது ஒரு கட்சியின் மீது இன்னுமொரு கட்சியினர் சேறு பூசும் நடவடிக்கைகளையே முன்னெடுத்தனர். எனினும், குற்றவாளிகள் இன்னும் சிக்காமலே சுதந்திரமாகத் திரிகின்றனர்.

விவாதத்தில் கலந்துகொண்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பி ரேமதாச, ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவதற்குத் தனது எதிர்கால அரசாங்கத்தின் கீழ், குறிப்பிட்ட நடவடிக்கைகளைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதாகத் தெரிவித்தார். பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்த விசேட ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படும் எனவும், அதில் உள்ளூர் மட்டுமன்றி, வெளிநாட்டு நீதிபதிகள், விசாரணை அதிகாரிகளும் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவர் எனவும் உறுதியளித்தார். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணையை தற்போதைய அரசாங்கம் நசுக்கி வருவதாகக் குற்றம் சாட்டிய அவர், தனது அரசாங்கத்தின் கீழ் ஒரு சிறப்பு நீதிமன்றத்தை நிறுவுவதாகவும், தாக்குதலுக்குக் காரணமானவர்களை நீதியின் முன் நிறுத்துவதாகவும் உறுதியளித்தார்.

250 க்கும் மேற்பட்ட கத்தோலிக்க வழிபாட்டாளர்களைக் கொன்று 500 க்கும் மேற்பட்டவர்களைக் கடுமையாகக் காயப்படுத்திய கொடூரமான பயங்கரவாதத் தாக்குதலுக்கு நேரடியாகப் பொறுப்பானவர்கள் இன்னும் நீதியின் முன் நிறுத்தப்படவில்லை என்பதில் இந்த நாட்டின் அனைத்து அரசியல் தலைவர்களும் வெட்கப்பட வேண்டும். ஈஸ்டர் தாக்குதல் ஆரம்பம் முதலே அரசியல் இலாபத்திற்காக பயன்படுத்தப்பட்டது என்பது இரகசியமல்ல. இச்சம்பவத்தின் பின்னர் கடும் அதிர்ச்சிக்கு உள்ளான கர்தினால் மல்கம் ரஞ்சித் உட்பட கத்தோலிக்க சமூகம் இந்த சம்பவம் தொடர்பில் நியாயமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கடுமையாக வலியுறுத்தி வந்த போதிலும், முடிவுகள் இதுவரை திருப்திகரமாக இல்லை என பலமுறை வலியுறுத்தி வருகின்றனர்.

கோட்டாபய ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுவர் என்றிருந்த நம்பிக்கையைக் கைவிட வேண்டியுள்ளதாகவும் கர்தினால் குறிப்பிட்டிருந்தார். தாக்குதலுக்கு முன்னும் பின்னும் அதிகாரத்திலிருந்த எவரும் தாக்குதலுக்கான உண்மையான காரணங்களைக் கண்டறிய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் பாராளுமன்றத்தில் எத்தனை விவாதங்கள் நடத்தப்பட்டாலும் அரசியல் காரணங்களை முன்னிறுத்தி அந்த விவாதங்கள் நடத்தப்பட்டால் அதனால் எந்தப் பயனும் இல்லை. மேலும், அந்த தாக்குதலின் பொறுப்பு மற்றும் சந்தேக நபர்களைக் கைது செய்வதில் உள்ள பலவீனம் குறித்து பொதுவெளியில் எவ்வளவு விவாதம் செய்தாலும், அந்த தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்காது. அனைத்து விசாரணைகளும் நடைமுறை மட்டத்தில் செய்யப்பட்டு உண்மை வெளிவர வேண்டும். இந்த நேரத்தில் அதை ஓர் அரசியல் கால்பந்தாக மாற்றுவதைத் தவிர்ப்பது மற்றும் அனைத்து தரப்பினரின் பொதுவான இலக்குகளுக்குப் பங்களிப்பதையும் சிறந்த பணியாக நாங்கள் பார்க்கிறோம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# படுகொலை செய்யப்பட்ட ஊடகர்களுக்கான நீதி

**லக்ஸ்மன்**

உலகின் பல நாடுகளிலும் பணியில் ஈடுபட்டிருக்கும் வேளையிலும் ஏனைய நேரங்களிலும் தமது பணிசார்ந்த செயற்பாடுகளுக்காக ஊடகப்பணியாளர்கள் கொல்லப்பட்டும் துன்புறுத்தப்பட்டும், கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டும் இருக்கிறார்கள் என்பது அறிக்கைகளின் வெளிப்பாடுகள். இலங்கையிலும், படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களான நீதிக் கோரிக்கைகள் கடந்த பல தசாப்தங்களாக அரசாங்கத்திடமும் சர்வதேச அமைப்புகளிடமும் முன்வைக்கப்பட்டவண்ணமே இருக்கின்றன.

இருந்தாலும் அக்கோரிக்கைகள் இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை. ஆட்சியில் இருப்பவர்களாலும், ஆட்சிக்கு ஆதரவானவர்களாலும் மேற்கொள்ளப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைகள், படுகொலைகள், கடத்தல்கள் பட்டியலிடப்பட்டிருந்தாலும் அதற்கான நீதியை வழங்குவதில் கரிசனையில்லாமலேயே இருக்கிறது. இது கவலைக்குரியதும் கண்டனத்துக்குமுரியதாகும்.

வடக்கு கிழக்கில் யுத்தம் நடைபெற்ற காலங்களிலும், அதன் பின்னரும் பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் தெற்கிலும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். தமது ஊடகப் பணிசார் நெருக்குதல்கள் காரணமாகப் பலியானவர்களுடைய பட்டியலை நோக்கினால், யுத்த காலத்தில் வடக்கு கிழக்கைச் சேர்ந்த 44க்கும் மேற்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

ஊடகவியலாளர், மனித உரிமை செயற்பாட்டாளர் மற்றும் நடிகராக இருந்த ரிச்சர்ட் டி சொய்சா இனம் தெரியாத நபர்களால் இவரது வீட்டில் வைத்து 1990 பெப்ரவரி 17இல் கடத்தப்பட்டுக் கொலைசெய்யப்பட்டார். பிரேமகீர்த்தி டி அல்விஸ் 31 ஜூலை 1989 ஜேவிபி புரட்சியின் போது படுகொலை செய்யப்பட்டார். இவர் இலங்கை வானொலி, தொலைக்காட்சி ஒலிபரப்பாளரும், பாடலாசிரியரும் ஆவார். இலங்கை வானொலி அறிவிப்பாளரான கே.எஸ்.ராஜா 1994 செப்டெம்பர் 3ஆம் திகதி கொழும்பில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்டு இயங்கிய பி.பி.சி. செய்தியாளர் மயில்வாகனம் நிமலராஜன் 2000 அக்டோபர் 19இல் படுகொலை செய்யப்பட்டார்.

நெல்லை நடேசன் என அழைக்கப்பட்ட ஐயாத்துரை நடேசன் மட்டக்களப்பில் வைத்து 2004 மே 31 அன்று சுட்டுக் கொல்லப்பட்டார். இறக்கும் போது இவர் இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் துணைத்தலைவராக பணியாற்றினார். தராக்கி என அழைக்கப்பட்ட தர்மரத்தினம் சிவராம் 2005 ஏப்ரல் 28ஆம் திகதி கொழும்பு பம்பலப்பிட்டியில் பொலிஸ் நிலையத்தின் முன்னால் கடத்தப்பட்டு பாராளுமன்ற வளாகத்திற்கு அருகில் கொல்லப்பட்டார்.

சிவராம், வீரகேசரி வாரவெளியீட்டின் கட்டுரையாளராகவும், தமிழ் நெற்றின் ஆசிரியர்களில் ஒருவராகவும் கொல்லப்பட்ட வேளையில் பணியாற்றிக் கொண்டிருந்தார். கல்முனையைச் சேர்ந்த எஸ்.எஸ்.ஆர் என அழைக்கப்பட்ட சுப்பிரமணியம் சுகிர்தராஜன் 2006 ஜனவரி 24ஆம் திகதி திருகோணமலையில் சுட்டுக் கொல்லப்பட்டார். செல்வராஜா ரஜீவர்மன் 2007 ஏப்ரல் 29 அன்று யாழ்ப்பாண நகரின் அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இவர் உதயன் பத்திரிகையின் அலுவலக செய்தியாளராக பணியாற்றியவர். சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியரான லசந்த விக்கிரமதுங்க 2009 ஜனவரி 8ஆம் திகதி இனந்தெரியாதோரால் கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டார். கேலிச்சித்திர செய்தியாளரும் இணையத்தளத்தின் கட்டுரையாளருமான பிரகீத், 2010ஆம் ஆண்டு ஜனவரி 24ஆம் திகதியன்று கடத்தப்பட்டார். இவர் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. தனது கணவருக்காக எக்னெலிகொடவின் மனைவி தொடர்ச்சியாகப் போராடிவருகிறார்.

இவ்வாறு கொல்லப்பட்ட, கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர்களது பட்டியல் நீண்டதாகவே இருக்கிறது. ஆனால், நீதியோ விசாரணையே முழுமை பெற்றபாடில்லை.
இந்த நிலையில், வடக்கு, கிழக்கில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நினைவு நிகழ்வுகளும் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரும் போராட்டங்களும் நடைபெற்று வருகின்றன. இவ்வருடத்திலும், சிவராம் மற்றும் ரஜீவர்மன் ஆகியோரின் நினைவு தினம் யாழ்ப்பாணத்தில் கடந்த சனிக்கிழமை (27.04.2024) நடைபெற்றிருக்கிறது.

அதே போன்று மட்டக்களப்பில் நேற்றைய தினம் (28.04.2024) கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு. ஊடக அமையம், இலங்கை தொழில்சார் இணைய ஊடகவியலாளர் அமைப்பு, வடக்கு கிழக்கு தெற்கு ஊடக அமைப்புகள் இணைந்து நீதி கோரும் போராட்டம் ஒன்றை நடத்தியிருக்கின்றனர்.

வடக்கு, கிழக்கில் ஊடக சுதந்திரத்தைப் பேண தொடர்ந்து குரல் கொடுக்கின்ற அதேவேளை, கொல்லப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட எமது ஊடக நண்பர்களுக்கான சர்வதேச தலையீட்டின் கீழ் நீதி வழங்கப்பட வேண்டும் என்பதில் தாம் சமரசம் செய்துகொள்ளத் தயாராக இல்லையென ஊடகவியலாளர்கள் தெரிவித்துவருகின்றனர். போராட்டங்களையும் விழிப்புணர்வு நிகழ்வுகளையும் நடத்துகின்றனர்.

இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கில் ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் கடந்த காலங்களில் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகளைக் கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம், யாழ். ஊடக அமையம், தொழில்சார் இணைய ஊடகவியலாளர் அமைப்பு, வடக்கு - கிழக்கு - தெற்கு ஊடக அமைப்புக்கள் தொடர்ச்சியாகக் கண்டித்தே வந்துள்ளன. தற்போதும் கண்டித்து வருகின்றன.

அந்தவகையில்தான், வடக்கு, கிழக்கில் ஊடக சுதந்திரத்தைப் பேண நாம் தொடர்ந்து குரல் கொடுக்கின்ற அதேவேளை, கொல்லப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஊடக நண்பர்களுக்கான சர்வதேச தலையீட்டின் கீழ் நீதி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வெளிவரத் தொடங்குகிறது.

நல்லாட்சி அரசாங்க காலத்தில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பிரதமராக இருந்தவேளை, கொல்லப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களுடைய குடும்பங்களுக்கு இடைக்கால நிவாரணமாக இழப்பீடொன்றை வழங்க முன்வந்து விசாரணை குழுவொன்று அமைக்கப்பட்டிருந்தது, அக்குழுவானது விசாரணைகளை முன்னெடுத்த போதும் ஆட்சி மாற்றத்தின் பின்னர் அது கிடப்பில் போடப்பட்டதுடன், பின்னர் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அது தொடர்பான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதுடன், அவ்வாறு விசாரணைக்குழு நியமிக்கப்படவில்லை என்று வாதிடப்பட்டிருந்தது.

இருப்பினும் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியான பதவியேற்றபின்னரும் கொல்லப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட எமது ஊடகவியலாளர்களது குடும்பங்களுக்கான இடைக்கால நிவாரணச் செயற்பாடுகள் முன் நகர்த்தப்படவில்லை என்பதுடன், நீதி வழங்கும் செயற்பாடும் நகர்த்தப்படவில்லை.

மொத்தத்தில், ரணசிங்க பிரேமதாச தொடக்கம் இப்போது உள்ள ஜனாதிபதி வரையில் ஜனாதிபதிகள் மாறியிருந்தாலும், ஆட்சி மாறியிருந்தாலும், படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நீதி இதுவரை கிடைக்காத சூழ்நிலையே காணப்படுகிறது. அதே நேரத்தில் இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு இலங்கை அரசாங்கம் நீதி வழங்காது என்ற சலிப்பான மனோநிலைக்கு ஊடகவியலாளர்கள் நகர்த்தப்படுவதில் தவறொன்றுமில்லையென்றே கூறவேண்டும்.

வடகிழக்கில் பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டமைக்கு தமிழ் மக்களது உரிமைசாரட் பிரச்சினைகளுக்குக் குரல் கொடுத்தமையையே காரணமாகச் சொல்லமுடியும். தொடர்ச்சியாக இருந்த அச்சுறுத்தல்கள் அவர்களுடைய மரணத்துக்கு இட்டுச் சென்றதுடன் பல ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டுத் தப்பிச் செல்லவேண்டிய நிலையையும் உருவாக்கியது.

நாட்டில் அமைதி நிலவிக் கொண்டிருந்தாலும், அச்சுறுத்தல்களையும் கண்காணிப்புகளையும் தற்போதும் எதிர்கொண்டுவரும் ஊடகவியலாளர்கள் தம்மைச் சுயமாகப் பாதுகாத்துக்கொண்டே ஊடகப் பணியினை மேற்கொள்ளவேண்டிய துர்ப்பாக்கியத்திற்குள்ளேயே இருக்கிறார்கள் என்பது மாத்திரமே உண்மை.

போராட்டங்கள் நடத்துவதும், அறிக்கைகளை வெளியிடுவதும், நினைவு நிகழ்வுகளை நடத்துவதும் பயன் கொடுப்பவையாக இல்லாவிட்டாலும், வேறு வழியில்லாது மேற்கொள்ளப்படுகின்றன என்றே கொள்ளமுடியும். வடக்கு கிழக்கில் நடைபெற்ற ஆயுத யுத்தம் மௌனித்தாலும் தொடரும் நெருக்கடிகள், கட்டுப்பாடுகள், சட்டங்கள், அச்சுறுத்தல்கள், ஊடகவியலாளர்களது படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நீதிக் கோரிக்கொள் நிறைவேற்றப்படுமா என்பது காத்திருப்பே.



## வாழ்வியல் தரிசனம்

மிகவும் திறமைசாலிகள் கூட தங்களை வெளிப்படுத்தத் தயங்குகின்றனர். ஆனால், அநேகர் எந்தவொரு விடயத்திலும் தனித்துவம், தகுதி இல்லாமலே போலி விளம்பங்களால் மேடை ஏறுவதுமுண்டு.

சபையில் முதல் வரிசையில் இடம்பிடிக்க பெரும் பிரயத்தனப்படுவார்கள். அது கிடைக்காது விட்டால் சிச் சீ இந்தக் கூட்ட ஒழுங்குமுறை தவறு என சொல்லி வெளியே மெதுவாக நழுவிச் செல்வார்கள்.

போலி கௌரவம் தேடுபவர்களைச் சுற்றி இருப்பவர்கள் தெரிந்து கொள்வார்கள். இந்த உண்மை தெரிந்தும் கூட விடாப்பிடியாக தங்களைக் காட்டிக்கொடுக்க முனைபவர்களை என்ன என்பது?

சிறப்பான செயல்களை எவர் செய்தாலும் அவர்களை ஜனங்கள் புரிந்துகொள்வார்கள்.

உலக ஹேமத்திற்காக ஒரு பங்காளனாக வலிந்து சேவை செய்பவர் தங்களை மேம்படுத்தி, புகழ் தேடவிரும்பமாட்டார்கள். உலகம் பெரிது ஒவ்வொரு பிரஜையும் வேண்டப்பட்டவர்கள! உலகப் பார்வை தீர்சண்யமானது.

பருத்தியூர் பால– வைரவநாதன்

## கடிதங்கள்

### வீதியை பாருங்கள்


உக்குவளை-மாருகொன மையவாடி வீதி, குடியிருப்புகளுக்குச் செல்லும் வீதி என்பன உடைந்துள்ளன. சமீபத்தில் பெய்த கடும் மழையினால் அந்த வீதி கடுமையாக சேதமடைந்துள்ளது.

இந்த வீதிகளின் நிலைமை பற்றி உக்குவளை செயலகம், பிரதேச சபைகளின் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தில் கடமையாற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அவதானித்துச் சென்றுள்ளனர்.

மாதங்கள் உருண்டோடிய பின்னரும் இந்த வீதிகள் இன்னும் புனரமைக்கப்படவில்லை. மக்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியிலேயே இந்த வீதியின் ஊடாக வாகனங்களில் செல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. கடும்மழை பெய்தால், நடந்துகூட செல்லமுடியாது என்றும் பிரதேசவாசிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

கிராம அபிவிருத்திக்கென பிரதேச செயலகங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது. அந்த நிதியிலிருந்து, இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு, பிரதேசவாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஏ.எம்.ஜலீல்



பன்மைத்துவ கலாசாரத்தை ஊக்குவிப்பதில்

# பிரேமதாசாவின் வகிபங்கு

## மே முதலாம் திகதி முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் 31ஆவது சிராத்ததினம்

**கலாநிதி. ச.பாஸ்கரன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்
அரசறிவியற் துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

இலங்கையில் மனது மறக்காத ஜனாதிபதிகளுள் முக்கியமான ஒருவராக திகழ்ந்தவர் அமரர் ரணசிங்க பிரேமதாச. அவர் 1989 முதல் 1993 மே 1 வரை (படுகொலை செய்யப்படும் வரை) பதவி வகித்தார்.

அவரது ஜனாதிபதி பதவிக்கு முன்னர் அவர் 1978 முதல் 1989 வரை இலங்கையின் பிரதமர் பதவி உட்பட நீண்ட மற்றும் அனுபவம் மிக்க அரசியல் வாழ்க்கையைக் கொண்டிருந்தார். மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் 31ஆவது நினைவு தினம் இவ்வருடம் அனுட்டிக்கப்படுகின்றது. இவர் 1993இல் கொழும்பு நகரில் நடைபெற்ற மே நாள் பேரணி ஒன்றில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்பட்டார். தொழிலாளர் தினமாகிய மே தினமே இவரது நினைவு தினமாக அனுட்டிக்கப்படுகின்றது.

இலங்கையில் ரணசிங்க பிரேமதாச ஜனாதிபதியாகப் பதவிவகித்த காலத்தில் பன்மைத்துவ சமூகத்திற்குள் பன்மைத்துவ கலாச்சாரத்தை ஊக்குவிப்பதற்கான பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்தார். இன, மொழி மற்றும் மத அடிப்படையில் இலங்கை மக்களிடையே நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமையை வளர்ப்பதில் குறிப்பிடத்தக்க சவால்கள் எதிர்கொள்ளப்பட்ட பொழுது பிரேமதாச அரசியல் கொள்கையாக்க செயன்முறையில் எல்லா சமூகமும் உள்ளடக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அங்கீகரித்தார். அரசியல் மற்றும் சமூகத்துறைகளில் அனைத்து சமூகத்தினருக்கும் பிரதிநிதித்துவம் மற்றும் பங்களிப்பை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்ட கொள்கைகளை அவர் செயல்படுத்தினார்.



இணைந்த கலாசாரத்தை ஊக்குவிப்பதன் மூலம் அவர் சிறுபான்மை குழுக்களுக்கு அங்கீகாரம் அளித்து அவர்களின் கவலைகளை நிவர்த்தி செய்ய முயன்றார். இதன் மூலம் பன்மைத்துவ கலாச்சாரம் வளர்ச்சியடைய பணியாற்றினார்.

பிரேமதாச ஜனாதிபதியாக இருந்த காலத்தில் வறுமை மற்றும் சமூக சமத்துவமின்மைக்குத் தீர்வு காண்பதில் கவனம் செலுத்தினார். ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வீட்டு வசதித் திட்டங்கள், கல்வித் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தினார். மிகவும் சவால் நிறைந்த ஒரு காலத்தில் துணிந்து ஜனாதிபதியாகச் செயற்பட்டு இந்நாட்டு மக்களின் விடிவிற்காக அயராது உழைத்தவர். இந்திய இராணுவம் இலங்கையில் நிலை கொண்டிருந்த காலத்தில் இலங்கையின் இறையாண்மையைப் பேணுவதற்கும் தெற்கில் ஜே.வி.பியின் சவால்களையும் வடக்கில் புலிகளின் பிரச்சினைகளையும் தீர்ப்பதில் முன்னின்று செயற்பட்டவர்.

இவர் இலங்கை மக்களுக்காக ஆற்றிய பணிகள் அளப்பரியது. இவர் ஆற்றிய பணிகளுக்காக இலங்கை வரலாற்றில் முதன் முறையாக 1986இல் இவருக்கு "ஸ்ரீலங்கா பிமான்ய" என்ற இலங்கையின் அதியுயர் பட்டம் வழங்கப்பட்டது.

இவர் இலங்கையின் பொருளாதாரம், கலாசாரம், இன நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி போன்றவற்றிற்கு ஒப்பற்ற தலைமைத்துவத்தை வழங்கி இலங்கையின் எதிர்கால அபிவிருத்திக்காக ஆற்றிய சேவைகள் என்றென்றும் போற்றப்பட வேண்டியவை ஆகும். ரணசிங்க பிரேமதாச இலங்கையின் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் குறிப்பிடத்தக்கப் பல சாதனைகளை மேற்கொண்டுள்ளார்.

வறுமை ஒழிப்பு திட்டத்தினைக் கொண்டு வந்து ஏழ்மையைக் குறைப்பதற்கும் ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் பல்வேறு நலத்திட்டங்களை பிரேமதாசா செயற்படுத்தினார். குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வீடு மற்றும் பிற உதவிகளை வழங்கும் 'ஜனசவிய' திட்டம் போன்ற வீட்டுத் திட்டங்களை அவர் தொடங்கினார். விளிம்புநிலை சமூகங்களுக்கான கல்வி மற்றும் சுகாதார சேவைகளை விரிவுபடுத்துவதில் அவர் கவனம் செலுத்தினார்.

தொழில் கட்சியிலிருந்து அரசியலுக்குப் பிரவேசித்த ரணசிங்க பிரேமதாச கொழும்பு மாநகர சபை உறுப்பினராகத் தெரிவாகி, பிரதி மேயராகவும் பதவியேற்று பின்னர் 1965ஆம் ஆண்டு பாராளுமன்றத்திற்குச் சென்று உள்ளூராட்சி அமைச்சராகவும், பிரதமராகவும் இலங்கையின் இரண்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகவும் பதவி வகித்தவர். இவர் பிரதமராக இருந்த போது "செமட செவன - அனைவருக்கும் நிழல்" எனும் வீடமைப்புத் திட்டத்தை ஆரம்பித்து பணியாற்றியவர்.

இதனால் எத்தனையோ ஏழை மக்கள் பயனடைந்தனர். வடக்கு, கிழக்கு உட்பட அனைத்து பகுதிகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டதனால் இனப் பாகுபாடின்றி, இனநல்லிணக்கத்திற்கான அடித்தளம் ஏற்படுவதற்கும் இதனால் வழியேற்பட்டது.

இவர் கம் உதாவ, உதாகல கம்மான ஆகிய முன்மாதிரி வீடமைப்புத் திட்டங்கள் ஊடாக இன மற்றும் மத வேறுபாடின்றி அனைவருக்கும் குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக பல திட்டங்களை மேற்கொண்டார். நகர அபிவிருத்தித் திட்டத்தையும் செயற்படுத்தினார். பிரேமதாசவின் தலைமையின் கீழ், குறிப்பாகக் கொழும்பில் நகர்ப்புற உள்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்குக் குறிப்பிடத்தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. குடிசைப் பகுதிகளை மேம்படுத்தவும், சுகாதாரத்தை மேம்படுத்தவும், நகர்ப்புற வசதிகளை மேம்படுத்தவும் திட்டங்களைத் தொடங்கினார். கிராமப்புற வளர்ச்சியை இலக்காகக் கொண்ட 'கம் உதாவ' திட்டம் கிராமப்புறங்களில் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு அதிக பங்களிப்பை வழங்கியது. பிரேமதாச தொழில்துறை மேம்பாட்டை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தினார்.

வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவிப்பதிலும் ஏற்றுமதி சார்ந்த தொழில்களை ஊக்குவிப்பதிலும் பொருளாதாரத்தை நவீனமயமாக்குவதிலும் கவனம் செலுத்தினார். அவரது நிர்வாகம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தவும் பொருளாதாரத்தை நிலைப்படுத்தவும் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியது.

கிராமிய அபிவிருத்தி தொடர்பில் கனவு கண்ட ரணசிங்க பிரேமதாச ஆடை உற்பத்தி தொழிற்சாலை திட்டங்கள் மூலமும் வறிய மக்களுக்காக ஜன சவிய திட்டத்தின் மூலமும், பாடசாலை மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம் மூலமும், சிறுவர்களின் போசாக்கை மேம்படுத்துவதற்கான மதிய உணவுத் திட்டத்தின் மூலமும் நாட்டின் அபிவிருத்தியையும் ஏற்றுமதி வருமானத்தையும் மேம்படுத்த முன்னின்று உழைத்தார்.

இதனால் வடக்கு, கிழக்கு உட்பட அனைத்து பகுதிகளிலும் ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளுக்கு தொழில்களைப் பெற்றுக் கொள்வதற்கும் வறிய மக்களின் வாழ்க்கை வசதிகளை மேம்படுத்துவதற்கும் வழியேற்பட்டது. இத்திட்டங்கள் சர்வதேச அளவிலும் முக்கியத்துவம் பெற்றன. ஜனசவிய வறுமை ஒழிப்புத் திடடம் தெற்காசியாவின் முதன்மையான வறுமை ஒழிப்புத் திடடமாக சர்வதேச அளவில் போற்றப்பட்டது. அவரது சேவைக்கு அங்கீகாரமளிக்கும் வகையில், 1987ஆம் ஆண்டை உலக குடியிருப்பு வருடமாக ஐக்கிய நாடுகள் சபை பிரகடனம் செய்தது.

இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டார். பிற நாடுகளுடனும் சர்வதேச நிறுவனங்களுடனும் இலங்கையின் இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்த பிரேமதாச பணியாற்றினார்.

அவர் அணிசேரா வெளியுறவுக் கொள்கையைப் பின்பற்றியதுடன் அயல்நாடுகள் மற்றும் உலகளாவிய சக்திகளுடன் நேர்மறையான உறவுகளையும் வளர்க்க முயன்றார். சமாதான முயற்சிகளைத் தொடக்கி இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலமாகத் தீர்வு காண முயன்றார். புலிகளுடன் மோதல்கள் நடந்து கொண்டிருந்த போதிலும், இனப்பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கும் நோக்கில் சமாதான முயற்சிகளை பிரேமதாச தொடங்கினார். இதன் மூலம் சிறுபான்மை சமூகங்களின் குறைகளை நிவர்த்தி செய்ய முயன்றார். சமூக நீதி மற்றும் சமத்துவத்தை மேம்படுத்தும் நோக்கில் சமூக சீர்திருத்தங்களை பிரேமதாச அறிமுகப்படுத்தினார்.

பெண்களுக்கு அதிகாரம் அளிக்கவும், தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாக்கவும், சமூக நலத் திட்டங்களை மேம்படுத்தவும் அவர் செயற்பாடுகளை மேற்கொண்டார்.

ஆயினும் இலங்கையின் இன முரண்பாட்டுத் தீர்வுக்கு இவர் ஆற்றிய பங்களிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ரணசிங்க பிரேமதாச வடக்கு மற்றும் தெற்கில் உள்நாட்டு யுத்தம் இடம்பெற்ற மற்றும் இந்தியப் படைகள் வடக்கு கிழக்கில் நிலைபெற்றிருந்த மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் இலங்கை இன முரண்பாட்டை தீர்ப்பதற்கும் இலங்கையின் பாதுகாப்பு மற்றும் இறைமையைப் பேணுவதற்கும் மிகப்பெரிய பங்களிப்பை ஆற்றி இருந்தார்.

இவ்வாறு இலங்கையின் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் இவர் மேற்கொண்ட பணிகள் அளப்பரியதாகும். அதுமட்டுமன்றி, இலங்கை என்ற தேசத்தின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவதற்காக இந்தியா போன்ற பிராந்திய வல்லரசுகளையே எதிர்த்து இலங்கையின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தியவர்.

இந்திய ஆக்கிரமிப்பு அமைதிப் படையினால் தமிழ் மக்களின் உரிமைகள் சீரழிந்த பொழுது அதை எதிர்த்து புலிகளுடன் பேசி இந்தியப் படையை இந்தியாவுக்கே திருப்பி அனுப்பியவர்.

இதன் மூலம் இந்நாட்டின் எதிர்கால அபிவிருத்திக்கான தெளிவான பாதையை எமக்கு விட்டுச்சென்ற பெருமை இவரையே சாரும்.

இந்நாட்டு மக்களின் எண்ணங்களில் நிலைத்திருக்கும் சிறந்த தலைவராக ரணசிங்க பிரேமதாச என்றும் போற்றப்படுகின்றார். ரணசிங்க பிரேமதாசவின் ஜனாதிபதி பதவியானது பல கலாசாரத்தை ஊக்குவிப்பதற்கும் பன்முகத்தன்மை கொண்ட சமூகத்தில் ஒற்றுமையை வளர்ப்பதற்குமான அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது.

இவர் வழியில் அவரது புதல்வர் சஜித் பிரேமதாச பயணிப்பது இந்நாட்டு மக்களுக்குக் கிடைத்த பெரும் பேறாகும்.

Sun Siyam பாசிக்குடாவின்

# தமிழ்-சிங்கள புத்தாண்டுக் கொண்டாட்டம்




தமிழ்-சிங்கள புத்தாண்டை வரவேற்கும் வகையில், Sun Siyam பாசிக்குடா தமது ஹோட்டல் வளாகத்தில் விசேட நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தது. புத்தாண்டு பிறப்பு தினமான ஏப்ரல் 13ஆம் திகதி, சுப வேளையில் வான வேடிக்கைகளுடன், தங்கியிருந்த விருந்தினர்கள் மற்றும் ஊழியர்களோடு, முகாமைத்துவத்தைச் சேர்ந்தவர்களும் இணைந்து இந்த கொண்டாட்டங்களில் பங்கேற்றிருந்தனர். கிழக்கில் சுற்றுலாவுக்கான புதுப்பிக்கப்பட்ட எதிர்பார்ப்பு வழங்கப்பட்டதுடன், சுபீட்சமும் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

மறுநாள், அண்மையில் மறுசீரமைப்பு செய்யப்பட்ட ஐந்து நட்சத்திர ஹோட்டலினூடாக, இலங்கையின் பாரம்பரிய பலகாரங்கள் பல காலை உணவு வேளைக்காக பரிமாறப்பட்டிருந்தது. இதன் போது அவற்றை தயார்ப்படுத்துவது தொடர்பான நேரடி விளக்கமும் சமையல் நிபுணரால் வழங்கப்பட்டிருந்தது. ஐஸ்கிறீம் சைக்கிள் மற்றும் இளநீர் வழங்கும் பகுதி போன்றன இதில் அடங்கியிருந்தன. ஹோட்டல் வளாகத்தினுள் காணப்படும் உயர்ந்த தென்னை மரங்களிலிருந்து பெறப்பட்ட தேங்காய்களிலிருந்து பெறப்பட்ட இளநீர் இங்கு பரிமாறப்பட்டிருந்தது.

அந்நாளில் பல்வேறு புத்தாண்டு விளையாட்டுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இதில் யானைக்கு கண் வைப்பது (அலியாட்ட அசெ திபீம), பானை உடைப்பு (வாசனா முட்டிய பிந்தீம), கயிறு இழுத்தல் (கம்ப அதீம), இசைக் கதிரை (சங்கீத புடு தரங்கய), சாக்கு ஓட்டம் (கோணி ரேஸ்), யோகட் ஊட்டல் (யோகட்ட கெவீம), பலூன் உடைத்தல் (பலூன் பிப்பிரீம) போன்றன அடங்கியிருந்தன.

இனிய மாலைப் பொழுதை களிப்பூட்டும் வகையில் நேரலை இசை விருந்து நிகழ்வையும் ஹோட்டல் ஏற்பாடு செய்திருந்தது. ஏப்ரல் மாதம் முழுவதிலும் ரூ.36,900 முதல் *half-board double* விசேட விலைக்கழிவுடனான கட்டணத்தை Sun Siyam பாசிகுடா வழங்குகின்றது. வழங்கப்படும் இதர சலுகைகளில், இலவச அறை மேம்படுத்தல், நெகிழ்ச்சியான *early check-ins* மற்றும் *late check-outs* கள் போன்ற ஹோட்டல் வசதிக்கேற்ப வழங்கப்படும்.

மாசற்ற கரையோரப்பகுதிகள் மற்றும் கலாசாரப் பெறுமதிகள் போன்றவற்றுக்கு புகழ்பெற்ற பாசிகுடா, இயற்கை அழகுடன், பிரத்தியேகமான அனுபவங்களையும் வழங்குவதற்கு புகழ்பெற்றுள்ளது. சொகுசு தங்குமிடம், சிறந்த உணவு, புத்துணர்வூட்டும் ஸ்பா சிகிச்சைகள் மற்றும் பெருமளவு சாகச அனுபவங்கள் போன்ற விருந்தினர்களுக்கு வாழ்நாள் நினைவுகளை ஏற்படுத்தும் வசதிகளை வழங்குகின்றது. Sun Siyam பாசிகுடாவினால், இலங்கையின் விருந்தோம்பல் துறையின் ஒப்பற்ற அனுபவம் வழங்கப்படுகின்றது.

இந்த ரிசோர்ட்டில் 34 நவீன, அதிகளவு இடவசதிகளைக் கொண்ட ஒன்று முதல் இரண்டு படுக்கை அறைகள் மற்றும் பீச் பெவிலியன்கள் போன்றன அடங்கியுள்ளதுடன், சிறந்த உள்ளக மற்றும் வெளியக அலங்கார அம்சங்களையும் கொண்டுள்ளது.

மாலைதீவுகளின் Sun Siyam ரிசோர்ட்ஸ் குழுமத்தின் அங்கமான Sun Siyam பாசிகுடா, சுற்றுலாப் பயணிகளின் வருகையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமை தொடர்பில் பெருமளவு எதிர்பார்ப்புகளைக் கொண்டிருப்பதுடன், கிழக்கின் அழகை ரசிக்க விரும்பும் சுற்றுலாப் பயணிகளுக்கு சிறந்த அனுபவத்தை வழங்குகின்றது. மார்ச் மாத இறுதியில் சுமார் 600,000க்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகளை இலங்கை வரவேற்றுள்ளதுடன், அதனூடாக 1.025 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானத்தை ஈட்டியுள்ளது.

*Infinity pool* இல் நீச்சல் அனுபவம், நலன் பேணல் சிகிச்சை அல்லது கலாசார செயற்பாடுகளில் பங்கேற்பது என எதுவாக இருந்தாலும், Sun Siyam பாசிகுடாவினால் ஒவ்வொரு அனுபவமும் ஒப்பற்றதாக அமைந்திருப்பது உறுதி செய்யப்படுகின்றது. உள்நாட்டு கலை மற்றும் கைவினை அம்சங்களுடன் பாசிகுடாவின் காட்சியம்சங்கள் நிறைந்த கரையோர அனுபவம் மேம்படுத்தி வழங்கப்படுவதோடு, ஜொலித்திடும் நட்சத்திரங்களின் கீழே பிரத்தியேகமான இராப் போசண அனுபவத்தையும் பெற்றுக் கொள்ள முடியும். விருந்தினர்களுக்கு *Slice & Grill* ஊடாக, விசேடமான *poolside* உணவருந்தும் அனுபவத்தை அல்லது *Beach Shack* இல் கரீபியன் பாணியில், வெப்பவலயத்துக்குரிய பானங்களை அருந்தும் அனுபவத்தை பெற்றுக் கொள்ளவும் முடியும்.

# கொமர்ஷல் வங்கிக்கு VISA கௌரவம்




*VISA* கொழும்பில் முன்னெடுத்திருந்த *VISA Commercial Solutions Client Forum* இல், உள்நாட்டுச் சந்தையில் வீசாவின் கூட்டாண்மை அட்டைகள் தொடரை அறிமுகப்படுத்துவதில் கொமர்ஷல் வங்கி அர்ப்பணிப்புடன் செயற்பட்டதை அங்கீகரிக்கும் வகையில் 'வசதியான மற்றும் பெருந்திரளான கூட்டாண்மை அட்டை வகைகளை அறிமுகப்படுத்துவதில் சிறந்து விளங்கியமை' என்பதற்காகக் கௌரவிக்கப்பட்டது.

*VISA Commercial Solutions Excellence* விருதானது *VISA* இன் இலங்கை மற்றும் மாலைத்தீவுகளுக்கான வதிவிட முகாமையாளர் அவந்தி கொலம்பகே இனால் வழங்கப்பட்டதுடன் இவ்விருதை வங்கியின் சார்பாகப் பிரதி பொது முகாமையாளர் - கூட்டாண்மை வங்கியியல் தமரா பேர்னார்ட் பெற்றுக்கொண்டார்.

கொமர்ஷல் வங்கியானது அண்மையில் இலங்கையில் கூட்டாண்மை மற்றும் பிற வர்த்தக நிறுவனங்களின் ஊழியர்களுக்காக *VISA* சிக்னேச்சர் மற்றும் *VISA* பிளாட்டினம் கூட்டாண்மை கடன் அட்டைகளை அறிமுகப்படுத்தியிருந்தது. இந்த புதிய தயாரிப்பானது கூட்டாண்மை நிறுவனங்களுக்கு ஊழியர்களின் செலவுகளை நிர்வகிக்க உதவுவதுடன் இந்த அட்டையானது ஒவ்வொரு நிறுவனத்தின் கூட்டாண்மை கடனட்டை கணக்குடன் இணைக்கப்பட்டுள்ளது. கூட்டாண்மை நிறுவனங்களின் ஊழியர்கள், அந்தந்த நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்ட பயணம், பொழுதுபோக்கு மற்றும் பிற செலவுகளுக்கு உலகில் எப்பகுதியில் இருந்தும் பணத்தினை செலுத்த இந்த அட்டைகளைப் பயன்படுத்தலாம். மேலும் *VISA* சிக்னேச்சர் கூட்டாண்மை கடனட்டைகளும் தங்கள் பயனர்களுக்குச் சர்வதேச விமான நிலையங்களில் ஓய்வறை அணுகல் மற்றும் பயணம் தொடர்பான விடயங்களுக்கு சலுகைகளை வழங்குகின்றன.

கொமர்ஷல் வங்கி இலங்கையின் மிகப் பெரிய தனியார் துறை வங்கி மற்றும் உலகின் சிறந்த 1,000 வங்கிகளில் பட்டியலிடப்பட்ட முதல் இலங்கை வங்கியாகும். கொமர்ஷல் வங்கி திறன்மிகு முறையில் அமையப்பெற்ற கிளை வலையமைப்புக்கள் மற்றும் 964 தானியங்கி இயந்திரங்களை கொண்டு இயங்குகின்றது. கொமர்ஷல் வங்கி இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகத் துறைக்கு பாரிய கடனுதவி வழங்குவதோடு, நாட்டின் வங்கித் துறையில் டிஜிட்டல் புத்தாக்கங்களில் முன்னணியில் உள்ளது. வங்கியின் வெளிநாட்டு செயற்பாடுகள் பங்களாதேஷை உள்ளடக்கியது, அங்கு வங்கி 20 கிளைகளை இயக்குகின்றது: மியன்மார் நய் பியி தாவில் நுண்நிதி நிறுவனத்தினை கொண்டுள்ளது.

புதுடெல்லி

# “சீதனத்தில் உரிமை இல்லை”

கேரளாவைச் சேர்ந்த பெண்ணொருவர், தனது கணவனுடன் ஏற்பட்ட பிரச்சினையைத் தொடர்ந்து பிரிந்து வாழ்ந்து வருகிறார். அவர், விவாகரத்து கோரி குடும்பநல நீதின்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அத்துடன், திருமணத்தின்போது பெற்றோர் தனக்கு சீதனமாக வழங்கிய நகைகளின் மதிப்பு மற்றும் ரொக்கப்பணத்தை மீட்டெடுக்க மற்றொரு மனுவையும் தாக்கல் செய்தார்.

“திருமணத்தின்போது எனது குடும்பத்தினர் தனக்கு 89 சவரன் தங்க நகைகளையும், ரூ.2 இலட்சத்துக்கான காசோலையையும் சீதனமாக வழங்கினர். திருமணமான முதல் இரவிலேயே தங்க நகைகளைப் பத்திரமாக வைப்பதாகக் கூறி என் கணவர் நகைகளை எல்லாம் வாங்கினார். மேலும், நகைகளை அவர் தனது தாயிடம் கொடுத்தார். இது குறித்து கேட்டதற்கு அப்போது தான் நகைகள் பாதுகாப்பாக இருக்கும் என்று சொல்லி சமாதானம் செய்துள்ளார்.

இருப்பினும், என் கணவரும் மாமியாரும் எனக்கு சீதனமாக வந்த நகைகளை விற்று அவர்களின் கடன் உள்ளிட்ட பொருளாதார சிக்கல்களைத் தீர்க்க பயன்படுத்திக் கொண்டனர். அவற்றை மீட்டு தரவேண்டும்" என மனுவில் கூறியிருந்தார்

இந்த வழக்கை விசாரித்த குடும்பநல நீதிமன்றத்தில், பெண்ணின் தங்க நகைகளைக் கணவரும் அவரது தாயாரும் முறைகேடாக அபகரித்தது



நிரூபிக்கப்பட்டதாகத் தீர்ப்பளித்தது. இதை எதிர்த்து கணவர் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

அதில், தங்க நகைகளை முறைகேடாகப் பயன்படுத்தியதை அந்த பெண் நிரூபிக்கவில்லை என்று கூறி கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இந்த தீர்ப்புக்கு எதிராக அந்த பெண் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார்.

இந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம். பெண்ணுக்கு அவரது குடும்பத்தினர் வழங்கும் சீதனம் என்பது அந்த பெண்ணின் சொத்தாகவே கருதப்படும் என்றும் அதில் கணவனுக்கு எந்தவொரு உரிமையும் இல்லை என்றும் தெளிவுபடுத்தியது.



மதுரை

## 30 விநாடிகளில் 29 எரியும் கொன்கிரீட் கற்கள் உடைப்பு

மதுரை சின்ன சொக்கிகுளம் பகுதியைச் சேர்ந்த சாப்ட்வேர் என்ஜினியர் விஜய் நாராயணன். டேக்வாண்டோவில் பயிற்சி பெற்ற இவர், பல்வேறு கின்னஸ் சாதனைகளை நிகழ்த்தி வருகிறார். கடந்த சில ஆண்டுகளில் டேக்வாண்டோவில் பல்வேறு பிரிவுகளின் கீழ் இதுவரை 32 கின்னஸ் சாதனைகளை இவர் நிகழ்த்தியுள்ளார்.

இந்த நிலையில், தனது 33ஆவது கின்னஸ் உலக சாதனையாக 30 வினாடிகளில் 29 எரியும் கொன்கிரீட் கற்களை கைகளால் உடைத்து சாதனை படைத்துள்ளார். இதற்கு முன் பாகிஸ்தானைச் சேர்ந்த முகமது இம்ரான் என்பவர் 30 வினாடிகளில், 25 கொன்கிரீட் கற்களை உடைத்ததே உலக சாதனையாக இருந்தது. இந்த நிலையில் அந்த சாதனையை விஜய் நாராயணன் முறியடித்துள்ளார்.

இந்த உலக சாதனையை அங்கீகரித்த கின்னஸ் உலக சாதனை நிறுவனம், நாராயணனை பாராட்டி சான்றிதழ் வழங்கி கௌரவித்துள்ளது.

## இந்தியரின் இதயத்தால் வாழும் பாகிஸ்தான் பெண்



பாகிஸ்தான் - கராச்சியை சேர்ந்த 19 வயதான யுவதி ஆயிஷா ரஷான், நீண்ட நாட்களாக மாரடைப்பால் அவதியுற்று வந்துள்ளார்.

அவருடைய உடல்நிலை சீராக இல்லாமையால், விரைவில் இதய மாற்று அறுவை சிகிச்சையை முன்னெடுக்குமாறு வைத்தியர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

இந்த அறுவை சிகிச்சைக்கு 35 இலட்சம் ரூபாய் செலவாகும். எனினும், ஆயிஷாவின் தாயால் அந்த செலவை ஈடு செய்ய முடியவில்லை. மாற்று அறுவை சிகிச்சைக்காக காத்திருக்கும் சந்தர்ப்பத்தில், அவரைக் காப்பாற்றும் முயற்சியின் ஓர் அங்கமாக, இரத்தத்தைப் பாய்ச்ச உதவும் இடது வென்ட்ரிக்குலர் (ventricular) சாதனத்தை வைத்தியர்கள் பொருத்தினர். அந்த முயற்சியும் கைகூடவில்லை. பின்னர் ஆயிஷா சிகிச்சையை மேற்கொள்ள இந்தியா பயணமாகினர்.

இந்தியாவின் சுகாதார விதிமுறைகளின் படி, வெளிநாட்டுப் பிரஜையொருவருக்கு தானம் செய்யப்பட்ட உடல் உறுப்புகளைப் பெறுவது கடினமாகும். எதிர்பாராத விதமாக ஆயிஷாவுக்கு மாற்று இதய அறுவை சிகிச்சைக்காக புதுடெல்லியைச் சேர்ந்த ஒருவரின் இதயம் கிடைக்கப்பெற்றது. 69 வயதான உயிரிழந்த இந்தியர் ஒருவரின் இதயம் அது என்பது குறிப்பிடத்தக்கது.

## உலகின் முதலாவது 60 வயது உலக அழகி

உலக அளவில் ஆண்டுதோறும் பிரபஞ்ச அழகிப்போட்டி (மிஸ் யூனிவர்ஸ்) நடந்து வருகிறது. இதில் 18 வயது முதல் 28 வயது வரையிலான இளம்பெண்கள் மட்டுமே பங்கேற்க முடியும்.

ஆனால், இந்த வயது வரம்பை பிரபஞ்ச அழகிப்போட்டி அமைப்பு கடந்த ஆண்டு நீக்கியது. அதன்படி இந்த ஆண்டு முதல் 18 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் யாரும் இந்த போட்டியில் பங்கேற்க முடியும்.

**“ செப்டெம்பர் மாதம் மெக்சிகோவில் நடைபெறும் இந்த ஆண்டுக்கான பிரபஞ்ச அழகிப்போட்டியில் அர்ஜென்டினா சார்பில் பங்கேற்பார்**

இந்த நிலையில், அர்ஜென்டினாவின் பியூனோஸ் அர்ஸ் மாகாணத்துக்கான பிரபஞ்ச அழகிப்போட்டி நடந்தது. இதில் அலஜாண்டிரா மரிசா ரோட்ரிக்ஸ் என்ற 60 வயது பெண் வெற்றி பெற்று மகுடம் சூடியிருக்கிறார். இந்த வெற்றி குறித்து பெரும் மகிழ்ச்சி தெரிவித்துள்ள அவர், இது ஒரு புதிய முன்னுதாரணத்தைப் பிரதிபலிப்பதாகக் கூறியுள்ளார்.

மேலும், அர்ஜென்டினாவின் தேசிய அளவிலான பிரபஞ்ச அழகிப்போட்டி அடுத்த மாதம் (மே) நடக்கிறது. இதில் பியூனோஸ் அர்ஸ் மாகாணம் சார்பில் பங்கேற்கும் அலஜாண்டிரா வெற்றி பெற்றால், செப்டெம்பர் மாதம் மெக்சிகோவில் நடைபெறும் இந்த ஆண்டுக்கான பிரபஞ்ச அழகிப்போட்டியில் அர்ஜென்டினா சார்பில் பங்கேற்பார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



பாகிஸ்தான்

## “சமரச ஒப்பந்தம் செய்ய மாட்டேன்”

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் பல்வேறு ஊழல் வழக்குகளில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். 4 வழக்குகளில் அவர் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு, சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. எனினும், கடந்த பெப்ரவரி மாதம் நடந்த பாகிஸ்தான் பாராளுமன்ற தேர்தலில் இம்ரான் கானின் பாகிஸ்தான்-தெஹ்ரீக் இன்சாப் கட்சியின் ஆதரவு பெற்ற 90க்கும் மேற்பட்ட சுயேச்சைகள் வெற்றிப் பெற்றனர்.

இந்தநிலையில், இம்ரான் கானின் சிறைத் தண்டனையை குறைக்க, ஒரு சமரச திட்டத்துக்கு ஒப்புக்கொள்ளும்படி அவருக்கு அழுத்தம் கொடுக்கப்படுவதாக பாகிஸ்தான்-தெஹ்ரீக்-இ-இன்சாப் கட்சி சமீபத்தில் குற்றம் சாட்டியது.

இதேவேளை, 28ஆவது நிறுவன தினத்தை முன்னிட்டு இம்ரான் கான் தனது கட்சி தொண்டர்கள் மற்றும் நாட்டு மக்களுக்கு அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

அதில் அவர் கூறியுள்ளதாவது:- நாட்டின் மீது மோசமான சர்வாதிகாரம் திணிக்கப்பட்டது. இது பொருளாதாரம், ஜனநாயகம் மற்றும் நீதித்துறையின் அழிவுக்கு அடிப்படையாக மாறியது. நாட்டின் அழிவை நோக்கிய இந்த வீழ்ச்சியை தடுக்க ஒவ்வொரு தனிமனிதனும் தங்களின் பங்களிப்பை ஆற்ற வேண்டும். உண்மையான சுதந்திரத்துக்கு தேவையான எந்த தியாகத்தையும் நான் செய்வேன். ஆனால், எனது அல்லது எனது தேசத்தின் சுதந்திரத்தில் ஒருபோதும் சமரசம் செய்ய மாட்டேன். போலி வழக்குகள் காரணமாக கடந்த 9 மாதங்களாக நான் சிறையில் உள்ளேன். இன்னும் 9 ஆண்டுகள் அல்லது அதற்கு மேலும் நான் சிறையில் இருப்பேன். ஆனால், என் தேசத்தை அடிமைப்படுத்தியவர்களுடன் நான் ஒருபோதும் சமரச ஒப்பந்தம் செய்ய மாட்டேன் என்று இம்ரான்கான் கூறியுள்ளார்.



# ஐ.பி.எல்: லக்னோவை வீழ்த்திய ராஜஸ்தான்



இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), லக்னோவில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸ் உடனான போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற ராஜஸ்தானின் அணித்தலைவர் சஞ்சு சாம்சன், தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னோ ஆரம்பத்திலேயே குயின்டன் டி கொக், மார்க்கஸ் ஸ்டொய்னிஸை ட்ரெண்ட் போல்ட், சந்தீப் ஷர்மாவிடம் இழந்தது.

பின்னர் அணித்தலைவர் லோகேஷ் ராகுலும், தீபக் ஹூடாவும் ஓட்டங்களை வேகமாகச் சேர்த்த நிலையில் 50 (31) ஓட்டங்களுடன் ஹூடா இரவிச்சந்திரன் அஷ்வினிடம் வீழ்ந்ததோடு குறிப்பிட்ட இடைவெளிகளில் அடுத்து வந்த நிக்கலஸ் பூரான் மற்றும் 76 (48) ஓட்டங்களைப் பெற்ற ராகுல் ஆகியோர் சந்தீப் ஷர்மா, ஆவேஷ் கானிடம் விழ 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 196 ஓட்டங்களை லக்னோ பெற்றது.

பதிலுக்கு 197 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் ஜொஸ் பட்லர், யஷஸ்வி ஜைஸ்வால் மூலம் வேகமாக ஆரம்பித்தபோதும் 34 (18) ஓட்டங்களுடன் பட்லரையும், 24 (18) ஓட்டங்களுடன் ஜைஸ்வாலையும் யஷ் தக்கூர், மார்க்கஸ் ஸ்டொய்னிஸிடம் அடுத்தடுத்த ஓவர்களில் இழந்ததுடன், குறிப்பிட்ட நேரத்திலேயே யுஸ்வேந்திர சஹாலுக்குப் பதிலாக தாக்கம் செலுத்தும் மாற்று வீரராகக் களமிறங்கிய ரியான் பராக்கை 14 (11) ஓட்டங்களுடன் அமித் மிஷ்ராவிடம் இழந்தது.

எனினும் அடுத்து ஜோடி சேர்ந்த சாம்சனின் ஆட்டமிழக்காத 71 (33), துருவ் ஜுரேலின் ஆட்டமிழக்காத 52 (34) ஓட்டங்களோடு 19 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்த நிலையில் 19 ஓவர்களில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக சாம்சன் தெரிவானார்.

இதேவேளை, டெல்லியில் நடைபெற்ற மற்றைய போட்டியில் மும்பை இந்தியன்ஸை டெல்லி கப்பிட்டல்ஸ் வென்றது.

இந்நிலையில் கொல்கத்தாவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் கப்பிட்டல்ஸை கொல்கத்தா நைட் றைடர்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.


இத்தாலிய சீரி ஏ தொடர்:

## சமநிலையில் ஜுவென்டஸ் மிலன் போட்டி



இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், ஜுவென்டஸின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் சமப்படுத்தியது.

## பாகிஸ்தான் எதிர் நியூசிலாந்து: தொடர் சமநிலையானது



பாகிஸ்தான், நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரானது சமநிலையில் முடிவடைந்தது.

இத்தொடரின் முதலாவது போட்டியில் மழையால் முடிவேதும் பெறப்படாததோடு இரண்டாவது போட்டியில் பாகிஸ்தானும், மூன்றாவது போட்டியில் நியூசிலாந்தும் வென்றிருந்தன. இந்நிலையில், நான்காவது போட்டியில் நியூசிலாந்து வென்றிருந்த நிலையில், லாகூரில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற ஐந்தாவது போட்டியில் பாகிஸ்தான் வென்றமையைத் தொடர்ந்தே 2-2 என தொடர் சமநிலையானது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: நியூசிலாந்து

பாகிஸ்தான்: 178/5 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: பாபர் அஸாம் 69 (44), பக்கர் ஸமன் 43 (33), உஸ்மான் கான் 31 (24), ஷடாப் கான் 15 (05) ஓட்டங்கள். பந்துவீச்சு: வில்லியம் ஓ ரூர்கே 1/25 [4], இஷ் சோதி 1/30 [4])


நியூசிலாந்து: 169/10 (19.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: டிம் செய்ஃபேர்ட் 52 (33), ஜொஷ் கிளார்க்சன் ஆ.இ 38 (26) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷகீன் ஷா அஃப்ரிடி 4/30 [4], உஸாமா மிர் 2/21 [4], இமாட் வஸீம் 1/5 [1], ஷடாப் கான் 1/15 [2])

போட்டியின் நாயகன்: ஷகீன் ஷா அஃப்ரிடி

தொடரின் நாயகன்: ஷகீன் ஷா அஃப்ரிடி

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## சமநிலையில் யுனைட்டெட் - பேண்லி போட்டி



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், மன்செஸ்டர் யுனைட்டெட்டின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணிக்கும் பேண்லிக்குமிடையிலான போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

யுனைட்டெட் சார்பாகப் பெறப்பட்ட கோலை அந்தனி பெற்றதோடு, பேண்லி சார்பாகப் பெறப்பட்ட கோலை ஸெகி அம்டௌனி பெற்றிருந்தார்.

இதேவேளை, வெஸ்ட் ஹாம் யுனைட்டெட்டின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் சமப்படுத்தியது.

இந்நிலையில் அஸ்டன் வில்லாவின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் சமப்படுத்தியது.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 77 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் ஆர்சனல் உள்ளது. 76 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் நடப்புச் சம்பின்களான மன்செஸ்டர் சிற்றியும், 75 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் லிவர்பூலும், 67 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் அஸ்டன் வில்லாவும் காணப்படுகின்றன. இதில் ஆர்சனல் ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளதோடு, சிற்றி இரண்டு போட்டி குறைவாக விளையாடியுள்ளது.









“வசத் சிரிய 2024” சிங்கள மற்றும் தமிழ்ப் புத்தாண்டு கொண்டாட்டம் கொழும்பு – ஷங்ரிலா பசுமை மைதானத்தில் சனிக்கிழமை (27) நடைபெற்றுள்ளது. இதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பங்கேற்றுள்ளார். அத்துடன், உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களும் பங்கேற்றிருந்தனர். இந்நிகழ்வில், இராஜதந்திரிகளும் பங்கேற்றிருந்தமை விசேட அம்சமாகும்.








விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 29 ஏப்ரல் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.